# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 26.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- மகளிர் மற்றும் மேம்பாட்டு அமைச்சகம் தேசிய ஊட்டச்சத்து மாதமாக செப்டம்பர் 2018ம் ஆண்டை அறிவித்துள்ளது.
  - நோக்கம் (Theme) : Reaching every household with Message of Nutrition.

- ஆதித்யா சவுபே நீர் மறுபயன்பாட்டிற்கான ஆராய்ச்சி மையம் (Aditya Choubey Center For Re-water Research) என்னும் பெயரில் கழிவுநீரை மறுசுழற்சி செய்து மறுபடியும் பயனுள்ள நீராக மாற்றுவதற்கான ஆராய்ச்சி மையத்தை ஐ.ஐ.டி கரக்பூர் (IIT Kharagpur) அமைத்துள்ளது.

- புயல் கணிப்பு மற்றும் வானிலை மாற்றங்கள் தொடர்பானவற்றை முன்கூட்டியே கணித்து எச்சரிக்கை விடும் வகையில், கேரள மாநிலத்தின் தலைநகர் திருவனந்தபுரத்தில் புயல் எச்சரிக்கை மையம் ஒன்றை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- **குறிப்பு:**
  - தற்போது சென்னை, மும்பை, விசாகப்பட்டினம், புவனேஸ்வர் மற்றும் ஆமதாபாத் போன்ற நகரங்கள் புயல் எச்சரிக்கை மையம் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- இந்தியாவிலுள்ள பௌத்த பாரம்பரியத்தை வெளிப்படுத்தவும் மற்றும் நாட்டின் பௌத்த தலங்களுக்கு சுற்றுலாவை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்ட சர்வதேச பௌத்த சம்மேளனத்தை (International Buddhist Conclave) புதுடெல்லியில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்துள்ளார்.

   - இம்மாநாட்டின் கருப்பொருள் : Buddha Path – The Living Heritage.

**உலக நிகழ்வுகள்**

- இந்தியா – சிங்கப்பூர் இடையேயான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு 2-வது திருத்த ஒப்பந்தம், இந்திய அரசு தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் ரஜ்னீஸ் மற்றும் சிங்கப்பூர் அரசின் தொழில்துறை அமைச்சகத்தின் இயக்குனர் பிரான்சிஸ் சோங் இடையே புதுடெல்லியில் கையெழுத்தாகி உள்ளது.
   - இதன் மூலம் இருநாடுகளுக்கிடையேயான வர்த்தகம் மேலும் அதிகரிக்கும்.

**விளையாட்டு நிகழ்வுகள்**

- இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டு போட்டியில், ஆடவருக்கான இரட்டையர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோகன் போபண்ணா – திவிஜ் சரண் ஜோடி, கஜகஸ்தான் நாட்டின் பியூப்லிக் யேவ்சயவ் ஜோடியை வீழ்த்தி இந்தியாவிற்கு ஆறாவது தங்கத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

**பொருளாதார நிகழ்வுகள்**

- ரிசர்வ் வங்கியால் அனுமதிக்கப்பட்ட ரசீதுகள் தள்ளுபடி அமைப்பு (TReDS – Trade Receivables Discounting System) மூலம் பரிவர்த்தனை செய்த முதல் பொதுத் துறை நிறுவனமாக (Public Sector Unit – PSU) இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) உள்ளது.
- **குறிப்பு:**
   - TReDS தளமானது பல நிதி நிறுவனங்களிடமிருந்து, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) வர்த்தக பெறுதல்களுக்கு நிதியளிக்க உதவுவதற்கான ஒரு நிகழ்நிலை மின்னணு நிறுவன (electronic platform) தொழில் நுட்பமாகும்.

**நியமனங்கள்**

- மஹாராஷ்டிர மாநிலத்தில் சுமார் 103 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள சஞ்சய் காந்தி தேசிய பூங்காவின் (Sanjay Gandhi National Park) விளம்பர தூதராக நடிகை ரவீனா தாண்டன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

We Shine Academy ™